ஊடகவியலாளர்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

அதனை மைக் ஜெம்சன் நிராகரித்தார். மக்கள் மிகவும் விழிப்பானவர்கள் என்றும் கொடுக்கப்படும் தகவல்களில் இருந்து அவர்களே ஒரு முடிவுக்கு வருவார்கள் என்றும் கேள்வி நேரத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சுதா நடராஜா போன்று பிரபாகரனும் தமிழ் ஊடக வியலாளர்கள் தக்க முறையில் செய்திகளைப் பதிவு செய்வதாகக் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடு கையில் அவுஸ்திரேலிய நேயர்கள் வேறு இணையங் களில் வரும் செய்திகளையும் தங்கள் வானொலியின் நம்பகத்தன்மை காரணமாக அதனூடாகவே கேட்க விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

'குற்றவாளிகளாக்கப்படும் சமூகங்கள்' என்ற தலைப் பில் ஜஸ்ரின் ரான்டோல் உரையாற்றினார். அவர் பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் எவ்வாறு பிரித்தானி யாவில் உள்ள சமூகங்களை குற்றவாளிகள் ஆக்குகிறது என்பது பற்றி விபரித்தார்.

மாநாட்டில் இறுதியாக கலாநிதி சேரன், 'ஆபத்தில் தமிழ் ஊடகவியல்' என்ற தலைப்பில் உரையாற்றினார். 'இலங்கையில் இன்றைய யுத்தம் பற்றியே கூடுதலாக கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் இன்று இலங்கை தனது சுற்றுச் சூழலை கையாள்வது போல் தொடர்ந்தும் செய்தால், இன்னும் 20 வருடத்தில் இலங்கை மிக மோச மான சூழலை எதிர்நோக்கும் என்கிறார் ஐநா சுற்றுச்சூழல் அதிகாரி. நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் நான் தமிழ் ஊடகம் பற்றிய வேறொரு பார்வையை முன்வைக்கப் போகிறேன். விமர்சனத்துடனான ஒரு மதிப்பீடு' என்ற முகவுரையுடன் சேரன் தனது உரையை ஆரம்பித்தார்.

'உண்மையை கண்டறிவது. சரியான உண்மையை அறிவது. நேரடியாக உண்மையை அறிவது. தகவலைப் பெறுவது. என்ன உண்மை? இதில் நான் எச்சரிக்கிறேன். தகவல் என்பது வரலாற்றுரீதியாக கட்டமைக்கப்பட்டது, சமூகத்தால் தயாரிக்கப்படுவது, அரசியல் ரீதியாக கையாளப்படுவது. இதனை விளங்கிக் கொள்ளாது விட்டால் தவறாகிவிடும்.

உண்மை என்பது தகவல்கள் மட்டுமல்ல. தகவல்கள் மட்டும் என்றால் அது போதாது. அதற்கு உணர்வு ரீதியான உரிமைகோரல் இருக்க வேண்டும். யுத்த சூழலில் முரண்பாடுகள் நிறைந்த சூழலில் அது மிகவும் முக்கியமானது.

ஒரு ஊடகவியலாளனாக, ஒரு படைப்பாளியாக, சமூகநீதிக்காக செயற்படும் கல்வியாளனாக எனது தத்துவார்த்த அரசியல் பொறுப்பு என்பது நான்கு விடயங்களில் தங்கி உள்ளது.

1. உண்மையை பேசும் கட்டாயம்

2. அதிகாரத்தில் உள்ளவர்களிடம் உண்மையைப் பேசுவது

3. மற்றவர்களுக்கு பொறுப்பாக இருத்தல் (மற்ற வர்கள்: மற்றைய சமூகங்கள், மற்றைய தத்துவங்கள்)

4. ஊடகவியல் என்பது ஒரு தொழில் அல்ல. அது ஒரு தொழில் நுணுக்க பொறுப்பும் அல்ல. விழுமியங்களுக்கான பொறுப்பு.

தமிழ் ஊடக விழுமியங்கள் பற்றி சற்று விரிவாக பார்கும் போது

1. தொழில் பயிற்சியின்மையின் போதாமை

2. இணைய ஊடகங்கள் உட்பட்ட ஊடகங்களில் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளாமையில் உள்ள போதாமை

3. பொருளடக்கத்தில் விடப்படும் தவறுகள்: தேவையற்ற அழுத்தம், பிழையான திகதி, நேரம், இடம்,தகவல்

4. ஊடகவியலில் ஊகத்திற்கு இடமளிக்கக் கூடாது. ஆனால் தமிழ் ஊடகங்களில் இது தொடர்கிறது.

5. கருத்துக்களையும் தகவல்களையும் சேர்த்து குழப்புவது தவறானது. வானொலி தொலைக்காட்சிகளில் இது பொதுவான குறைபாடாக உள்ளது.

6. எப்போதும் மீள் மதிப்பீடு செய்வது ஊடக விழுமியங் களுக்கு பொறுப்பாக இருப்பதற்கான முக்கிய அம்சமாகும். நிபுணத்துவ கருத்துக்களை பயன்படுத்தும் போது மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். ஆனால் தமிழ் ஊடகவியலில் இப்பிரச்சினை பெரிதாக இல்லை. ஏனென்றால் தாங்கள் எல்லோரும் நிபுணர்கள் என்றே அவர்கள் கருதுகிறார்கள்.

தமிழ் ஊடகங்களில் ஆறு முக்கிய அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

1. நாங்கள் மொழிக்கு முக்கியத்துவம் கொடுப்ப தில்லை. தமிழ் பத்திரிகைகளில் தான் அந்த மொழி பற்றிய எவ்வித அறிவும் இல்லாத ஒருவர் ஆசிரியராக இருக்க முடிகிறது. அப்பத்திரிகையை நான் இங்கு இனம்காட்ட விரும்பவில்லை.

2. முக்கியமானது சுயதணிக்கை. ஊடகவியலைப் பொறுத்தவரை சுயதணிக்கை எப்போதுமே பிரச்சினை யானது.

3. தேசியப்பற்று. இது எப்போதும் தவறானது என்றல்ல. ஆனால் அதன் எல்லைகள் ஊடக விழுமியங்களின் எல்லைகளை மீறுகின்றது. இது தமிழ் ஊடகவியலில் பெரும் பிரச்சினையாக உள்ளது.

4. ஊடகவியல் வர்த்தக மயப்படுத்தப்படுவதும் சினிமா மயப்படுத்தப்படுவதும்.

5. மிக முக்கியமானது ஊடக விழுமியங்கள். நாங்கள் ஊடகவியலின் உண்மைத் தன்மையை உயர்த்திப் பிடிக் கப் போகிறோமோ? அல்லது எங்களது நம்பிக்கைகளை உயர்த்திப் பிடிக்கப் போகிறோமா? என்பது. முரண் பாடு கூர்மையடைந்துள்ள யுத்த சூழலில் இது மிக முக்கியமானது.

கருத்துச் சுதந்திரமும் ஊடகச் சுதந்திரமும் உண்மை யான ஜனநாயகத்திற்கு எந்தச் சூழ்நிலையிலும் மிக அவசியமானது என்றே நான் வாதிடுவேன். இது இல்லாமல் உண்மையான ஜனநாயக சமூகத்தை உண்மைத் தகவல்களை அறிந்த சமூகத்தை பார்க்க முடியாது.

6. எங்களிடம் எதிர்வினை இருப்பதில்லை. நாங்கள் ஆசிரியர் பகுதிக்கு எழுதுவதில்லை. நாங்கள் ஊடகங் களை இருவழித் தொடர்பு ஊடகமாக பயன்படுத் துவதில்லை.

இவற்றை நாங்கள் கவனத்தில் கொள்ளாது விட்டால் நாங்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்போம். நாங் கள் வருமுன் செயற்படுபவர்களாக இருக்க வேண்டும். நாங்கள் முன்னோக்கி நகர்வதாக இருந்தால் ஊடக வியலின் அடிப்படைகளை கடைப்பிடிக்க வேண்டும்.' என்று கூறி தனது உரையை சேரன் நிறைவு செய்தார்.

அவரைத் தொடர்ந்து சர்வதேசத் தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் தலைவி ஆனந்தி சூரியப் பிரகாசம் நன்றி யுரை வழங்கினார். இறுதியாக கேள்வி நேரம் இடம் பெற்றது. வழமை போல் கேள்வி நேரம் சுவாரஸ்யமாக அமைந்தது.

பழங்கள்ளு

கார் என்று பேர் படைத்தாய்

வழுதி

(ஒரு பேப்பருக்காக)

பாலுக்குத் தண்ணி கலக்கிற பழக்கம் நமக்குண்டு.ஞாபகமிருக்கிறதா? பாலென்றால் ஊரில் நமக்கெல்லாம் பஞ்சம். கோயிலில் பாலாபிசேகம் என்றாலும், நிறத்திற்குப் பாலும், மீதிக்கு நீருமாகத்தான் குடம் நிறைந்து இருக்கும். 'பால் தேத்தண்ணி' என்றாலே வலு ஆபூர்வம். 'பால் கோப்பி' கூட கலியாண வீட்டில் மாத்திரம்தான் கிடைக்கும். பால் என்றாலே அத்தனை நமக்கு அருந்தல். பாலே அவ்வளவு இருக்கும் போது தயிர், மோர், நெய் நமக்குக் கிடைக்குமா?

நம்மூருக்கு அயலூர் இளவாலையில் 'சித்திரமேழி' என்றோர் இடமுண்டு. அங்கு பால், தயிர் அதிகம் கிடைப்பதுண்டு. வெண்ணெய் திருடித்தின்ற கிருஷ்ணரே வளர்ந்த இடம் சித்திரமேழி என்ற ஓர் எண்ணம் எனக்குக் கன காலமாக உண்டு.

எங்களூர் கோயில் திருவிழா என்றால் மரக்கறிச் சாப்பாட்டிற்கு எப்படியோ தயிர் கிடைத்துவிடும். பால்காய்ச்சி உறை இட்டுத் தயிர் வைப்பா அம்மா. நம்மூரில் மோர் அவ்வளவுபுழக்கத்தில் இல்லை. கீரிமலை கிருஷ்ணப்பிள்ளை மடத்தில் பெரிய அண்டாப் பானையில் வெங்காயம், மிளகாய் எல்லாம் அரிந்து போட்டு துழாவி அள்ள மோர் இருக்கும். அனேகமான தண்ணீர்ப் பந்தல்களில் சர்க்கரைத்தண்ணி, தேசிக்காய்த்தண்ணியுடன், மோரும் இருக்கும். ஆனால், நான் மோர் குடிப்பதில்லை. அது என்னவோ எப்பவும் மோர் குடித்தாலும், அல்லது எண்ணெய்த்தீன் ஏதும் திண்டாலும் வயித்தாலடிக்குது.

இப்போது மோர் என்று வேறொரு கதை பார்ப்போம். இது நாயக்கர் காலக் கதை. 15ஆம் நூற்றாண்டு பஞ்சப் பாட்டு இது. இதை எழுதியவர் காளமேகப் புலவர். வசைபாடக் காளமேகம் என்பர். எனக்கென்னவோ நக்கலடித்துக் கவிதைபாட காளமேகம் அளவு வேறெவரும் இல்லை என்றுதான் தோன்றுகிறது.

இந்த நக்கலைப் பாருங்கள். காளமேகப் புலவர் நடுவெய்யிலில் நடக்கிறார். கடும் தாகம். அதுதீர மோர் வேண்டும். ஓர் இடைச்சி மோர் தருகிறாள். அந்த மோர் எப்படி இருக்கிறது.

ஒரே தண்ணி கலப்பு. நீரைத்தான் அவள் மோர் என்று தருகிறாள். என்பது காளமேகப் புலவரின் கணிப்பு.

'கார் என்று பேர் படைத்தாய் ககனத்துறும் போது
நீர் என்று பேர் படைத்தாய் நீள்தரையில் வந்ததன்பின்
வார் என்ற மென்முலை ஆய்ச்சியர் கை வந்ததன் பின்
மோர் என்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே'

கார் - முகில், ககனம் - ஆகாயம், வார் - கச்சை, ஆய்ச்சியர் - பெண்கள். இதன் பொருளைப் புரியுமாறு சொல்லவோ?

ஆகாயத்தில் இருக்கும் போது முகில் என்று பேர் பெற்றாய், பூமியை வந்தடைந்தபின் நீர் என்று பெயர் பெற்றாய், கச்சையணிந்த மார்பையுடைய பெண்களின் கையில் சேர்ந்த பின் மோர் என்ற பேர் பெற்றாய். இவ்வாறு கார் (முகில்) நீர், மோர், என்ற மூன்று பேரும் பெற்றாய். இந்த நக்கல் புரிகிறதுதானே? அதாவது, மோரென்ற பெயரில் நீரைத்தான் இந்த இடைச்சி தருகிறாள். என்பதுதான் இந்த நக்கலின் பொருள்.

ஊரிலும் இப்படி ஒரு நக்கல் உண்டு தானே? பாலுக்குள் தண்ணீர் அதிகம் கலந்திருந்தால் 'என்ன உங்கன்ர பசு இண்டைக்குக் கனக்கத் தண்ணி குடிச்சிட்டுதோ?' என்று நக்கலாகக் கேட்பவர்கள் பலர் இருக்கிறார்கள் தானே? அப்படி ஆட்டிறைச்சிக் கறிக்குள் உருளைக் கிழங்கு அதிகம் இருந்தால், ஆடு உருளைக்கிழங்கு அதிகம் திண்டிட்டுதோ? என்று நக்கலடிப்பவர்களும் இருந்தார்களே?

நக்கலோ, நளினமோ நமது வாழ்வில் இருந்த நகைச்சுவை உணர்வு இப்போதெல்லாம் இல்லாமல் போயிற்று இல்லையா?

INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07908 866 300**